**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 |
| | : | Prosecution - **PW-19** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரசேகரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 25th day of September 2024.

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ், 4 ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5 ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

**முதல்விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 10.02.2018 அன்று பசுபதிபாளையம் காவல்நிலைய வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது, பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை அடங்கிய வழக்குக்கோப்பை எனது புலன்விசாணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 14.45 மணிக்கு சம்பவ இடமான N.வெள்ளாளப்பட்டி, கீரிக்கல்பாதை, தங்கவேல் என்பவர் காட்டிற்கு சென்று, வரவழைக்கப்பட்ட சாட்சிகள் திருமதி.சரண்யா, திரு.சிவப்பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் .......

தயாரித்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.15. பின்னர் 15.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த உபயோகப்படுத்தப்பட்டு, கீழே போடப்பட்டிருந்த பாக்குதட்டுகள் இரண்டு, கிழிந்த கார் மேட் ஒன்று, பிளாஷ்டிக் டம்ளர்கள் மூன்று, காலியான வாட்டர் பாக்கெட்டுகள் மூன்று, அக்கார்டு ஏசிசி பிராந்தி காலிபாட்டில்கள் மூன்று, இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் ஆகியவற்றை மகஜர் தயாரித்து கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய மேற்படி சொத்துக்கள் நீதிமன்றத்தில் உள்ள முறையே சா.பொ.1, 5, 2, 3, 4, 6, 7 ஆகும். பின்னர் சம்பவ இடத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மோப்பநாய் தடய அறிவியல் நிபுணர், கைரேகை நிபுணர் அவர்களை வரவழைப்பதற்கு மாவட்ட காவல் அலுவலர் மூலம் தகவல் கொடுத்தேன். பின்னர் சம்பவ இடத்தில் கிடந்த சுமார் 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்ய, பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்து, சம்பவ இடத்தில் வைத்து பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.16.

பின்னர் பிரேதத்தை அடையாளம் காணும் பொருட்டு தலைமைக்காவலர் குமார் என்பவர் மூலம் கரூர் அரசு கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் பிரேதத்தை வைக்க வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் சரண்யா, சிவபிரகாஷ், சிவக்குமார், ராஜேந்திரன், சக்திவேல், அன்பரசு, முருகேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

இறந்தவர் பற்றிய அடையாளம் கண்டுபிடிக்க இறந்தவரின் கைரேகை மற்றும் புகைப்படம் எடுத்து உள்ளூர் தொலைக்காட்டி, நாளிதழ்களில் வெளியிட அறிக்கை தயார் செய்து, விளம்பரப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டேன். பக்கத்தில் உள்ள மாவட்டங்களுக்கும் தகவல் தெரிவித்தேன்.

பின்னர் 16.02.2018 அன்று பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு வேண்டுகோள் கடிதத்துடன் தலைமைக்காவலர் 334 குமார் என்பவரை அனுப்பி வைத்தேன். அதில், பிரேத பரிசோதனைக்கு பிறகு, இறந்துபோனவரின் மண்டையோடு, தொடை எலும்பு ஆகியவற்றை சேகரிப்பதற்காக வேண்டுகோளுடன் கடிதம் அனுப்பி வைத்தேன். நான் அளித்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.17. பின்னர், பிரேதத்தை கரூர் நகராட்சி சார்பில் அடக்கம் செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன்.

பிரேத பரிசோதனைக்கு பிறகு, மருத்துவரால் வெட்டி எடுத்து கொடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த ரோஸ்கலர் சட்டை ஒன்று, நீலகலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, எலாஸ்டிக் பூமக்ஸ் ஜட்டி ஒன்று ஆகியவற்றை தனியறிக்கையுடன் தலைமைக்காவலர் குமார் என்பவர் ஆஜர் படுத்தியதை படிவம் 95ல் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய இரத்தக்கறை படிந்த ரோஸ்கலர் சட்டை ஒன்று, நீலகலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, எலாஸ்டிக் பூமக்ஸ் ஜட்டி ஒன்று ஆகியவை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள முறையே சா.பொ.14, 13, 15 ஆகும். கைப்பற்றிய தடயங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் நான் பணிமாறுதல் ஆனதால், வழக்குக்கோப்பை பின்னர் வந்த ஆய்வாளர் வசம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 முதல் 8 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் 8 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த பிறகு, இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியும் என்றும் தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 |
| | : | Prosecution - **PW-20** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபாலகிருஷ்ணன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 25th day of September 2024.

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ், 4 ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5 ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

**முதல்விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம், உடுமலைபேட்டை காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 01.11.2020 அன்று பசுபதிபாளையம் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 182/2018 வழக்குக்கோப்பை எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 10.11.2020 அன்று சம்பவ இடத்திற்கு சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டும், சாட்சிகள் சரண்யா, சிவபிரகாஷ், சிவக்குமார், ராஜேந்திரன், சக்திவேல், அன்பரசன், முருகேசன் ஆகியோர்களை விசாரித்தேன். சாட்சிகள் முந்தைய ஆய்வாளர் பதிவு செய்த வாக்குமூலத்தில் சொன்னவாறு என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

25.02.2021 அன்று இவ்வழக்கில் சம்பவ இடத்தில் உள்ள dum tower மூலமாக பெறப்பட்ட உள் மற்றும் வெளி அழைப்புகள் சம்மந்தப்பட்ட செல்போன் நெம்பர்களையும், இறந்தவர் அணிந்திருந்த சட்டையில் இருந்த F Tube என்ற நிறுவனத்திலிருந்து பெறப்பட்டிருந்த செல்போன் எண்களையும் ஆய்வு செய்து, பத்து செல்போன் எண்களை கண்டறிந்து அவர்களை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு பேசி, திருப்பூர் மாவட்டம், கணக்கம்பாளையத்திற்கு சென்று சாட்சிகள் ராஜேஸ்குமார், லோகநாயகி ஆகியோர்களிடம் இறந்துபோனவரின் புகைப்படத்தை காண்பித்து விசாரித்ததில், இறந்துபோனவர் சுப்புராஜ், த/பெ. கிருஷ்ணசாமி, கணக்கம்பாளையம் என துலங்கியதின்பேரில், மேற்படி சாட்சிகள் ராஜேஸ்குமார், லோகநாயகி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 10.04.2021 அன்று செல்போன் எண்களின் அடிப்படையில் வழக்கின் சந்தேக எதிரிகளான கனகராஜ், த/பெ. சண்முகம் என்பவரை 11.04.2021 அன்று பகல் 9.00 மணிக்கு பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை சார்வு செய்தேன். அதன்படி, 11.04.2021 அன்று காலை காவல்நிலையத்தில் ஆஜரான கனகராஜ் என்பவரை விசாரித்தபோது, அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை வரவழைக்கப்பட்ட சாட்சிகள் சுரேஷ்குமார், சிவபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். சாட்சிகள் மற்றும் எதிரியின் கையெழுத்து பெற்றேன். பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், எதிரி மற்றும் சாட்சிகளுடன் எதிரி வீட்டிற்கு சென்று, எதிரியின் வீட்டின் மோட்டார் ரூமில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த சுமார் 65.5 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய முனை வளைந்துள்ள இரும்பு அருவாள் ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய அருவாள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.8. பின்னர் எதிரி மற்றும் வழக்குச்சொத்துடன் நிலையம் வந்தேன். பின்னர் ......

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி சந்தோஷ்குமார் என்பவரை தேடி வந்ததில், கரூர் நகரம், தெரசா கார்னர் அருகில் வைத்து 11.04.2021 அன்று 14.30 மணிக்கு கைது செய்து, வரவழைக்கப்பட்ட சாட்சிகள் முன்னிலையில் விசாரித்தபோது, எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 15.00 மணிக்கு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மற்றும் சாட்சிகளுடன் சணப்பிரட்டி, ஆதிதிராவிடர் தெருவில் உள்ள குமரேசன் என்பவர் வீட்டிற்கு சென்று, அவர் வீட்டிற்கு முன்பே நிறுத்தியிருந்த TN 72 AA 9303 என்ற மாருதி ஆம்னி வாகனத்தை எதிரி சந்தோஷ்குமார் அடையாளம் காட்டி ஆ 4 ர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயாரித்து 17.00 மணிக்கு கைப்பற்றினேன்.

பின்னர் எதிரி மற்றும் வழக்குச்சொத்துடன் நிலையத்திற்கு வந்தேன். எதிரிகள் கனகராஜ், சந்தோஷ்குமார் ஆகியோர்களை நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே சாட்சிகள் சந்தோஷ்குமார், சிவபிரகாஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

12.04.2021 அன்று கரூர் உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி, கரூர் அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் சுகந்தி மற்றும் பெண்காவலர்களுடன் தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டி, நடுத்தெருவிற்கு சென்று, எதிரிகள் அம்மு (எ) அழகுலெட்சுமி, ஜெயலலிதா ஆகியோர்களை அவர்களது வீட்டின் முன்பு வைத்து 6.15 மணிக்கு கைது செய்து, 11.00 மணிக்கு பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு கொண்டு வந்தேன். பின்னர் எதிரி அம்மு (எ) அழகுலெட்சுமி என்பவரை வரவழைக்கப்பட்ட சாட்சிகள் முன்னிலையில் விசாரித்தபோது, எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.15 மணிக்கு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகள் கையொப்பம் பெற்றேன். எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், ஆஜர் செய்த இரண்டு

புகைப்படங்களை 13.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயாரித்து கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய புகைப்படங்கள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.10 மற்றும் 11.

பின்னர், இவ்வழக்கின் மற்றொரு எதிரி பிரகாஷ் என்பவரை தேடி வந்ததில், கரூர் ஈஸ்வரன் கோவில் பின்புறம் வைத்து அன்றைய தினம் 15.00 மணிக்கு கைது செய்து, நிலையம் கொண்டு சென்று, வரவழைக்கப்பட்ட சாட்சிகள் சுரேஷ்குமார், சிவபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது, எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 15.30 மணிக்கு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சாட்சிகள் மற்றும் எதிரியுடன், எதிரியின் வீட்டிற்கு சென்று, அவரது வீட்டில் ஸ்டோம் ரூமில் உள்ள செல்பில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த சுமார் 57 செ.மீ. நீளமுள்ள மரக்கைபிடியுடன் கூடிய இரும்பு அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயாரித்து 17.30 மணிக்கு கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய அருவாள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.12.

பின்னர் எதிரி மற்றும் வழக்குச்சொத்துடன் நிலையத்திற்கு வந்து, எதிரியை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே சாட்சிகள் சுரேஷ்குமார், சிவபிரகாஷ், குமரேசன் ஆகியோர்களை விசாரித்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

14.04.2021 அன்று நிலையம் ஆஜரான சுப்புராஜ் என்பவரது சகோதரர்கள் ஜெயராஜ், செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அன்றைய தினமே, சிறப்பு உதவி ஆய்வாளர் 334 குமார், நகராட்சி மயான காவலர் ஆறுமுகம், உதவி ஆய்வாளர் ராஜேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் தனித்தனியாக பதிவு செய்தேன்.

18.04.2021 அன்று டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அய்யப்பன், ரவிச்சந்திரன், தலைமைக்காவலர் 1134 முருகானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

26.04.2021 அன்று இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்துக்களை PR.105 ன் படி ஒப்படைத்தேன்.

07.06.2021 அன்று இவ்வழக்கில் இறந்துபோனவரை உறுதி செய்வதற்காக சூப்பர்இம்போசிசன் செய்வதற்கும், DNA பரிசோதனைக்கு FTI கார்டு பெறுவதற்கும், நீதித்துறை நடுவர் எண்.1 கரூர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கொடுத்து, உத்தரவு பெற்று, அதன்படி 16.06.2021 அன்று சென்னை, தடய அறிவியல் ஆய்வகத்தில் தலைமைக்காவலர் சரவணன் என்பவரை ஒப்படைப்பதற்காக அனுப்பி வைத்தேன்.

21.06.2021 அன்று தலைமைக்காவலர் சரவணன் என்பவர் மூலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் முன்னுரிமை கடிதம் பெற்று, சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன்.

25.07.2021 அன்று நான் பணிமாறுதலாகி சென்றதால், எனக்கு பின்னர் வந்த ஆய்வாளரிடம் வழக்குக்கோப்பை ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 முதல் 8 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் 8 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த பிறகு, இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியும் என்றும் தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**மறு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 |
| | : | Prosecution - **PW-21** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.R.சிவசங்கரி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 25th day of September 2024.

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ், 4 ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5 ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

அ.சா.21 திருமதி.**R**.சிவசங்கரி, நீலகிரி மாவட்டம், கேத்தி காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதால், சென்னையிலிருந்து கரூருக்கு வந்து செல்லும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றம் **Crl**.**M**.**P**.**No**.1147/2024 ல் கடந்த 23.09.2024 தேதியில் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, அ.சா.21 திருமதி.**R**.சிவசங்கரி, நீலகிரி மாவட்ட நீதிமன்ற காணொலி அரங்கில் முன்னிலையாகியுள்ளார். நீலகிரி மாவட்ட நீதிமன்ற காணொலி அரங்கில் உள்ள அ.சா.21 இந்நீதிமன்றத்தில் காணொலி மூலம் காணொலி திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சி அமர்ந்துள்ள நீலகிரி, மாவட்ட நீதிமன்ற காணொலி அரங்கில் அவர் அருகில் வேறு யாரும் இல்லை என்று ........

**நீதிமன்ற Assistant Programmer திரு.வெங்கடேஷ் என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு சாட்சி இந்நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் திருமதி.ஜெயந்தி, அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நீலகிரி மாவட்டம், கேத்தி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2021 ம் வருடம் கரூர் மாவட்டம், குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, பசுபதிபாளையம் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு அலுவலில் இருந்து வந்தபோது, கடந்த 01.09.2021 அன்று பசுபதிபாளையம் காவல்நிலைய குற்ற எண். 82/2018 ச/பி. 302 இதச வழக்குக்கோப்பை எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, வழக்குக்கோப்பை பார்வையிட்டு, இறந்துபோனவரின் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மண்டையோட்டை மானுடவியல் ஆய்வு செய்த செய்து அறிக்கை வழங்கிய தடய அறிவியல் அலுவலர் முனைவர் திரு.மணிமாறன் என்பவரிடம் அறிக்கை பெற்று, அவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோனவரின் பிரேதத்திலிருந்த தொடை எலும்பையும், இறந்துபோனவரின் அம்மா எல்லம்மாளின் இரத்த மாதிரியையும் ஒப்பீடு செய்து ஆய்வு செய்த, முனைவர் உஷாராணி என்பவரிடமிருந்து DNA அறிக்கை பெற்று, அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், இறந்துபோனவரின் உடல் உள்ளுறுப்புகளை இராசயன பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர் முனைவர் ராஜேந்திரன் அவர்களிடமிருந்து பகுப்பாய்வு அறிக்கை பெற்று, அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பிரேத பரிசோதனை செய்த மருத்தவர் சங்கர் அவர்களிடம் இறுதி கருத்துரை பெற்று, அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், சாட்சிகள் அருண்குமார், சுசீலா, காவலர் 1520 பாபு, முதல்நிலைக்காவலர் சகாயராணி, ஆய்வாளர் செல்வராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர், 21.09.2021 அன்று வழக்கின் சட்டப்பிரிவை இதச 302 லிருந்து 120(பி), 302, 109, 364 இதச-ன் கீழ் மாறுதல் செய்து, சட்டமாறுதல் அறிக்கையுடன் குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 முதல் 8 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் 8 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த பிறகு, இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியும் என்றும் தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்